# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 248/2017 | Date : 09.07.2025 | PW 1 |
|---|---|---|
| Name: சந்திரசேகரன் | த/பெ. வைத்தியலிங்கம் | |

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா வழக்குரையில் 4 அயிட்ட சொத்துக்கள் குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.14 ஆக மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் தவறானது என்றாலும் மாதிரி வரைபடத்தில் சொல்லியுள்ளதுபோல் எந்த பாதையும் தாவா சொத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண். 167/6A யில் குறிப்பிட்டுள்ளது தார் சாலை என்றால் சரிதான். அது அரசாங்கத்திற்கு சொந்தமான தார் சாலை என்றால் சரிதான். நான் அரசை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 167/6A வில் விளம்புகை பரிகாரம் ஏதும் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். அரசாங்கத்தை நான் தரப்பினராக சேர்க்காததால் வழககு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண். 167/6B ல் 1 ஆம் பிரதிவாதியின் சமாதி உள்ளது என்றால் சரிதான். அவருடைய முன்னோர்கள் சமாதியும் அங்கு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண். 167/6B யை நாங்கள் தொன்றுதொட்டு பாதையாகதான் பயன்படுத்திவந்தோம். எங்களை தடுத்து நிறுத்தி தற்போது அந்த வழியை சமாதியாக மாற்றிவிட்டார்கள். நான் சொல்வது போல் சர்வே எண்.167/6B ல் பாதை இருந்திருந்தால் வரைபடத்தில் காணப்பட்டிருக்கும் என்றாலும் அதனால்தான் கிராம நிர்வாக அதிகாரி சாட்சியமளிக்கும் சமயத்தில் சர்வே எண்.167/6B ல் பாதை ஏதும் இல்லை என்று சாட்சியமளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. தாவாவில் நான் சொல்லியுள்ள சர்வே எண்.4/1E, 4/1G, 167/6E ஆகியவற்றில் 750 அடி நீளம் 15 அடி அகலத்தில் பாதை இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கண்டுள்ள சர்வே எண்.4/1E, 4/1G வில் எனக்கு உரிமை இல்லாத போது அந்த சர்வே எண்.4/1E, 4/1G ல் செல்வதற்கு நான் உரிமை கோருவதும் தடவழி கோருவதும் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் காண்பித்துள்ள எனக்கு சொந்தமான 1 வது அயிட்ட சொத்திற்கு செல்வதற்கு வடக்கிலிருந்து தெற்காக சுமார் 15 அடி அகலமுள்ள மண்பாதையும், அதேபோல் கிழக்கிலிருந்து மேற்காக இரண்டு மண் பாதைகளும், கீரைக்கானூர் செல்லும் தார் ரோட்டை அடைகிறது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மண்பாதையிலும் 2 மாதங்களுக்கு முன்பாக சிமெண்ட் பாதை போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அந்த பாதையில்தான் சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே இருந்த பாதையை மறைத்து பொய்யாக வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனக்கு தட பாத்திய உரிமை ஏதும் இல்லை என்று

சொன்னாலும் சரியல்ல. மேற்படி தாவா சொத்தில் 2வது அயிட்டம் குறித்து இதே நீதிமன்றத்தில் 3 முதல் 5 பிரதிவாதிகள் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண். 6/2023 தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் நான் எதிர்வாதம் செய்து வழக்கு நடத்தி வருகிறேன். நான் ஏற்கனவே இதே போன்று தாவா சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்து அது ஒருதலை பட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது குறித்து நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/—சந்திரசேகரன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/— R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.